Spare

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

மனு எண்: 1318/ ஊராட்சி/2017

ஆணை எண்: 240 /2017

நாள்: 25/09/2017

திருமதி. த. ரஞ்சிதம்,
மேற்பனைக்காடுமேற்கு (போஸ்ட்),
புதுக்கோட்டை மாவட்டம்.

- மனுதாரர்

ஆணையர்,
அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்,
அறந்தாங்கி.

- எதிர் மனுதாரர்

## ஆணை

புதுக்கோட்டை மாவட்டம், மேற்பனைக்காடுமேற்கு ஊராட்சியை சேர்ந்த திருமதி. த. ரஞ்சிதம், அவர்களின் 11.9.2017 நாளிட்ட புகார் மனுவில் அவர் வீட்டிற்கு இரண்டு வருடமாக தண்ணீர் வரவில்லையென மண்டல அலுவலர் மற்றும் பஞ்சாயத்து கிளார்க் ஆகியோர்களிடம் பலமுறை நேரிலும், மனு மூலமாகவும், தொலைபேசி மூலமும், இறுதியாக மாவட்ட ஆட்சியர் மற்றும் உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) ஆகியோரிடமும் நேரில் மனு கொடுக்கப்பட்டது என்றும், ஆனால் எந்த அலுவலரும் தண்ணீர் திறக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். தண்ணீர் திறக்க சுந்தரலிங்கம் என்பவருக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையரால் உத்திரவிடப்பட்டது. ஆனால் அவர் திறக்காமல், பாலசுப்ரமணியன் என்ற சம்பந்தமில்லாத நபர், அவர் விருப்பப்படி எந்த நேரமும் தண்ணீர் திறப்பது, மோட்டார் வைத்து கொடுப்பது, அதற்கு பெருந்தொகையை வசூல் செய்வது போன்ற செயல்களில் ஈடுபட்டு ஏழை

எளியவர்களுக்கு தண்ணீர் விடுவதில்லை என்றும், மேல் அலுவலர்களுக்கு பணம் வசூல் செய்து கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்து தண்ணீருக்காக வசூல் செய்து வருகின்றனர் என்றும், ஏழை, எளிய மக்கள் வாழும் விவசாய குடும்பங்களுக்கு தண்ணீர் வருவதே இல்லை எனத் தெரிவித்து, சம்பந்தமில்லா நபரை அப்புறப்படுத்திவிட்டு, அரசால் நியமிக்கப்பட்ட நபரை தண்ணீர் திறக்க ஆவண செய்யக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு மேற்பனைக்காடு மேற்கு ஊராட்சியை சார்ந்தது. எனவே மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திருமதி. த. ரஞ்சிதம் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

<u>பெறுநர்</u>

திரு. த. ரஞ்சிதம்,
க/பெ. தங்கவேலு
மேற்பனைக்காடுமேற்கு போஸ்ட்,
அரந்தாங்கி தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம்–614 624.

நகல்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை மாவட்டம்.
புதுக்கோட்டை.